[16th August 1960

District Development Council

*192 *Q*.—SRI N. R. THIAGARAJAN: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதிதாக அமைக்கப்பட்ட ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் கூட்டங்களில் நடவடிக்கைகளைப் பதிவு செய்ய மினிட்ஸ் புத்தகம் வைக்கப்படாததன் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: Rules prescribing the procedure for the transaction of business at the meetings of the District Development Councils have not yet been issued. The question of making necessary provision for the maintenance of a minute book in the draft rules to be issued in this regard is under the consideration of the Government.

SRI N. R. THIAGARAJAN: ஸார், என்னுடைய அனுபவத்தில் இந்த டெவலப்மெண்ட் கவுன்ஸில் என்பதே கேலிக் கூத்தாகப் போய்விட்டது. அங்கே நிறைவேறும் தீர்மானம் ஒன்று கூட . . .

MR. SPEAKER: கேள்வி நேரத்தில் கனம் அங்கத்தினர்கள் அவரவர்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுவதில் பிரயோசனம் இல்லை. அவர்களுடைய சொற்பொழிவின்போது தான் சொல்ல வேண்டும். "எனது அபிப்பிராயம்" என்று சொல்லுவது கேள்வி அல்ல. ஆகையால் அந்த முறையில் கேட்க வேண்டாம்.

SRI N. R. THIAGARAJAN: டெவலப்மெண்ட் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பற்றி "இந்தத் தீர்மானம் நிறைவேறியதே, என்ன ஆயிற்று" என்று கேட்டால், "அம்மாதிரித் தீர்மானம் ஒன்றும் நிறைவேறவில்லையே, அம்மாதிரித் தீர்மானம் நிறைவேறியதாக ரெக்கார்டு இல்லையே" என்று கலெக்டர் அவர்கள் கூறுகிறார்கள். இந்த நிலைமையை மாற்றி, இதைப் பயனுள்ளதாகச் செய்ய, சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: டெவலப்மெண்ட் கவுன்ஸில் இப்போது தான் ஆரம்பமாகியிருக்கிறது. இதற்குள் ஒன்றும் சரியாக நடைபெறவில்லை என்று புகார் சொல்லுவார்களானால், அதில் பங்கெடுத்துக் கொள்ளுகின்றவர்களைப் பற்றியும் புகார் சொல்ல வேண்டியதாக இருக்கும். அதற்கு வேண்டிய விதி முறைகளை ஏற்படுத்த சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருகிறது.

SRI M. S. SELVARAJAN: Sir, is there any standing instruction to the Collectors not to allow Press people to the meeting of the Development Council as it is?

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I think I answered this question once before but I do not recollect the facts.

16th August 1960]

SRI S. M. ANNAMALAI: ஸார், இந்த டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில் சட்டம் எப்போது அமுலுக்கு வந்தது? ஏன் இன்னும் விதிகள் தயார் செய்யப்படாமல் கால தாமதம் ஆகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM: நடைமுறை அனுபவத்தையொட்டி தகுந்த முறையில் விதிகள் செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் இது தாமதமாகிக்கொண்டு வருகிறது. முக்கியமான விஷயங்களுக்கு விதிகள் செய்யப் பட்டிருக்கின்றன. இன்னும் எந்தெந்த விஷயங்களுக்குச் செய்ய வேண்டுமோ அவைகளுக்கெல்லாம் அனுபவத்தையொட்டிச் செய்ய வேண்டுமென்றிருக்கிறோம்.

Elementary school at Unjini village

* 194 Q.—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the reasons for withdrawing the recognition of the aided elementary school at Unjini village in Udayarpalayam taluk, Sendurai firka, Tiruchirappalli district;

(b) when the school was closed; and

(c) the steps taken to open a new school in that place?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) The manager of the Aided Elementary School, Unjini, violated the rules relating to Recognition and Aid of Elementary Schools. The average attendance in the school for June and July 1959 was nil and the attendance return was not submitted for August 1959. The school building was not suitable and the teachers were not paid properly.

(b) The school was closed by the management on 22nd September 1959.

(c) The Special Officer, District Board, Tiruchirappalli, has been asked to take urgent steps for the opening of a Board Elementary School in the Village.

Marriages for the inmates of the After-care Home for women

* 197 Q.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட கேள்விகளுக்கு தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்கம் நடத்துகிற அனாதைப் பெண்கள் இல்லத்திலுள்ள எத்தனைப் பெண்களுக்கு 1959–60-ம் வருஷத்தில் திருமணங்கள் நடைபெற்றன ?

(ஆ) இவ் விடுதியிலிருக்கும் இளம் பெண்களுக்கு மாப்பிள்ளைகள் தேவையென்று விளம்பரம் செய்த பிறகு எத்தனை வாலிபர்கள் இவ் விடுதியிலுள்ள இளம் பெண்களை மணந்துகொள்ளக் கடிதங்கள் அனுப்பினார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) The number of inmates in the institutions under the control of the Chief Inspector of Approved Schools and Vigilance Service who were married during 1959 and 1960 (up to 31st May 1960) were 47 and 13 respectively.

(ஆ) No such advertisement was published.